செய்தி வெளியீடு எண்: 482 நாள்: 14.08.2012

**செய்தி வெளியீடு**
**இந்து சமய அறநிலையத் துறை**
**சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்**

ஆண்டுதோறும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் அனைத்து சமுதாய மக்களும் பங்கு பெறும் வகையில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்படுகிறது. இவ்வாண்டு மாநிலத்தில் 370 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து 15.8.2012 புதன்கிழமை அன்று சிறப்புடன் நடைபெறவுள்ளது.

சென்னையில் மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை ஆகியோர் 34 திருக்கோயில்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மாநிலத்தின் பிற இடங்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெறும் திருக்கோயில்களில் மாவட்ட ஆட்சியர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்திய சுதந்திரத் திருநாளை ஒட்டி நடைபெறும் இச்சிறப்புமிகு சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியை அனைத்து சமுதாய மக்களும் பங்கு பெற்று சிறப்பிக்க வேண்டப்படுகிறது.

இணைப்பு: முக்கியப் பிரமுகர்கள் கலந்துக்
கொள்ளும் திருக்கோயில்கள்
விவரப்பட்டியல்

ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை

வெளியீடு: –

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

செய்தி வெளியீடு எண்: 482–2 நாள்: 14.08.2012

# 15.08.2012 இந்திய சுதந்திர திருநாள், சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து சென்னை நகரத்திலுள்ள முக்கிய திருக்கோயில்களில் கலந்துகொள்ளும் மாண்புமிகு பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை ஆகியோர் விவரம்

| **வ. எண்.** | **திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி** | **கலந்து கொள்ளும் மாண்புமிகு பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தை** |
|---|---|---|
| 1. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவெற்றியூர், சென்னை–19 | மாண்புமிகு அவைத்தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** |
| 2. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலைத் தெரு, சென்னை –3 | மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** |
| 3. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு | மாண்புமிகு மின்சாரத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் **திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன்** |
| 4. | அருள்மிகு சென்னமல்லீசுவரர் மற்றும் சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில், தேவராஜ முதலி தெரு, சென்னை – 3. | மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் **திரு. கே.பி. முனுசாமி** |
| 5. | அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை–14. | மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புர வளர்ச்சித்துறை அமைச்சர் **திரு. ஆர். வைத்திலிங்கம்** |
| 6. | அருள்மிகு அகஸ்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், நுங்கம்பாக்கம், சென்னை–34. | மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் **திருமதி. பா. வளர்மதி** |